பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 03 2024 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி-செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறையினர் நேற்றிரவு கைது செய்தனர்.

2. தமிழகத்தில் மக்களவை தேர்தலின் போது, அத்தியாவசிய பணிகளில் ஈடுபடுவோருக்கான தபால் வாக்குகள் குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

3. மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 57 பேர் கொண்ட மற்றொரு வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது..

4. தமிழகத்தில் பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளின் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளன.

5. சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் ஸ்ரீகாந்த், கிரண் ஜார்ஜ், ரஜாவத் ஆகியோர் காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

------ *இனி விரிவான செய்திகள்* ---

>>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறையினர் நேற்றிரவு கைது செய்தனர்.

முன்னதாக, இவ்வழக்கில் திரு. கெஜ்ரிவாலுக்கு எதிராக அமலாக்கத்துறை நடவடிக்கை எடுப்பதற்கு தடை விதிக்க முடியாது என்று தில்லி உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

மதுபான கொள்கை முறைகேடு வழக்கு தொடர்பாக திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை 9 முறை சம்மன் அனுப்பியிருந்த நிலையில், அவர் ஆஜராகாமல் இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் இல்லம் அருகே உள்ள பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு பலத்த பாதுகாப்பும் போடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, கைது செய்யப்பட்ட திரு. அரவிந்த் கெஜ்ரிவாலை உடனடியாக விடுவிக்க கோரி, ஆம் ஆத்மி கட்சியின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 57 பேர் கொண்ட மற்றொரு வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

அருணாச்சலப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் திரு. நபம் துகி, அருணாச்சலப்பிரதேச மேற்கு தொகுதியிலும், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் திரு. வைத்திலிங்கம் புதுச்சேரி தொகுதியிலும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஆதிர் ரஞ்சன் சௌத்ரி மேற்குவங்க மாநிலம், பஹரம்பூர் தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

மக்களவை தேர்தலின் போது, அத்தியாவசிய பணிகளில் ஈடுபடுவோருக்கான தபால் வாக்குகள் குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, பிஎஸ்என்எல், சென்னை மெட்ரோ ரயில், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய உணவுக் கழகம், ஊடகவியலாளர்கள் ஆகியோர் வாக்குப்பதிவு நடைபெறும் நாளன்று பணியில் ஈடுபட வேண்டிய நிலையில் இருந்தால், அவர்கள் 12-**D** விண்ணப்பத்தை, தங்கள் தொகுதி தேர்தல் அதிகாரியிடமிருந்து பெற்று, இம்மாதம் 25ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

பாரத ஸ்டேட் வங்கி அளித்த தேர்தல் பத்திரங்கள் தொடர்பான தகவல்களை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கப்பட்ட தேர்தல் பத்திரத்தின் எண், நன்கொடை வழங்கியவர்கள் மற்றும் அதை பெற்ற கட்சிகளின் விவரங்கள், இதில் இடம்பெற்றுள்ளது.

**www.eci.gov.in/candidate-politicalparty** என்ற இணையதளத்தில் இதனை அறிந்து கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**>>>>><<<<<**

தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாக 3 பேர் மீது தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், வெடிமருந்து தயாரிப்பு, சதிச்செயல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டதாக கூறப்பட்டுள்ளது.

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பிற்கு நிதி திரட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகவும் தேசிய புலனாய்வு முகமை கூறியுள்ளது.

**>>>>><<<<<**

இந்தியா – மொசாம்பிக் - தான்சானியா இடையேயான கடற்படை கூட்டுப் பயிற்சி தான்சானியாவில் தொடங்கியது.

இரண்டு கட்டங்களாக நடைபெறும் இப்பயிற்சியில் இந்திய கடற்படை கப்பல்கள் **TIR** மற்றும் **SUJATA** கப்பல்கள் பங்கேற்றுள்ளன.

இம்மாதம் 27ஆம் தேதிவரை தான்சானியாவில் **Sansibar** மற்றும் மொசாம்பிக்கின் **Mabudo** துறைமுகங்களில் முதற்கட்ட பயிற்சி நடைபெறுகிறது.

அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளுதல், படகுகளை கையாளுதல், துப்பாக்கிச் சுடுதல் உள்ளிட்ட பயிற்சிகளில் மூன்று நாடுகளின் கடற்படையினரும் ஈடுபடுகின்றனர்.

**>>>>><<<<<**

டொமினிக்கன் குடியரசில் ஹைத்தி படையினரிடம் சிக்கிய 12 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர் திரு. ஜெய்சங்கர், வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் நலனை காப்பதில் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியர்களை மீட்பதற்கு உறுதுணையாக இருந்த டொமினிக்கன் குடியரசுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் அணுசக்தியை முறையாக பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தேசிய மாணவர் படை - இந்திய அணுசக்திக் கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தேசிய மாணவர் படையின் தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜெனரல் குர் பீர்பால் சிங், இந்திய அணுசக்திக் கழக நிர்வாக இயக்குநர் திரு. சேகர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதையடுத்து, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தமது பிரதிநிதிகளை தேசிய மாணவர் படையின் முகாம்களில் ஈடுபடுத்தி, அவர்களுக்கு அணுசக்தி குறித்த பல்வேறு பயிற்சிகளை இந்திய அணுசக்திக் கழகம், அளிக்கவுள்ளது.

அத்துடன் நாடுமுழுவதும் உள்ள இந்திய அணுசக்திக் கழகத்தின் பல்வேறு வசதிகளை தேசிய மாணவர் படை வீரர்கள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் பிஜேபி போட்டியிடும் தொகுதிகளின் இறுதி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி பொள்ளாச்சி, கரூர், சிதம்பரம், நாகை, தஞ்சாவூர், மதுரை, விருதுநகர், திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர் ஆகிய தொகுதிகளில் அக்கட்சி போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜேபி கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக போட்டியிடும் தொகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம், அரக்கோணம், தருமபுரி, ஆரணி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், திண்டுக்கல், கடலூர், மயிலாடுதுறை ஆகிய தொகுதிகளில் அக்கட்சி போட்டியிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமமுக – திருச்சி மற்றும் தேனி தொகுதியிலும், திரு. ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு ராமநாதபுரம் தொகுதியிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, ஈரோடு, ஸ்ரீபெரும்புதூர், தூத்துக்குடி ஆகிய தொகுதிகளில் போட்டியிடுகிறது.

திரு. ஜான் பாண்டியன் தலைமையிலான தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு தென்காசி தொகுதியும், திரு. தேவநாதன் தலைமையிலான இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகத்திற்கு சிவகங்கை தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் போட்டியிடும் அனைத்து தொகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

>>>>><<<<<

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின், திருச்சியில் இன்று தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

அதைத் தொடர்ந்து பெரம்பலூரிலும் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவரும், அஇஅதிமுக பொதுச்செயலாளருமான திரு. எடப்பாடி பழனிசாமி தமது தேர்தல் பிரச்சாரத்தை வரும் 24ஆம் தேதி திருச்சியில் தொடங்கவுள்ளார்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 12 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது.

எஞ்சியுள்ள 13 தொகுதிகளில் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இம்மாதம் 28ஆம் தேதி தொடங்குகிறது.

அம்மாநிலத்தில் மொத்தம் 5 கோடியே 32 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இது கடந்த மக்களவைத் தேர்தலை விட, 46 லட்சம் பேர் அதிகம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அத்துடன், பெண் வாக்காளர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 லட்சத்திற்கு மேற்பட்ட முதல்முறை வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 11 லட்சம் பேர் உள்ளதாகவும், அவர்கள் வீட்டிலேயே வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 51 ஆயிரத்து 756 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. அதிகபட்சமாக பார்மர் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 611 வாக்குச்சாவடிகள் இடம்பெறவுள்ளது.

25 மக்களவை தொகுதிகளை கொண்ட ராஜஸ்தானில், பிஜேபி சார்பில் 15 வேட்பாளர்களும், காங்கிரஸ் சார்பில் 10 வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் ஸ்ரீகாந்த், கிரண் ஜார்ஜ், ரஜாவத் ஆகியோர் காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஸ்ரீகாந்த் 21-16, 21-15 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Zii Jia Lee-**யை வென்றார்.

கிரண் ஜார்ஜ் 18-21, 22-20, 21-18 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Alex Lanier-**ஐ வென்றார்.

மற்றொரு போட்டியில் ரஜாவத், 21-14, 21-13 என்ற செட் கணக்கில் சீனாவின் **Lan Xi Lei-**ஐ வென்றார்.

ஆடவர் பிரிவில் லக்ஷயா சென்னும், மகளிர் பிரிவில் பி.வி. சிந்துவும் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தோல்வியடைந்தனர்.

**>>>>><<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டி இன்று சென்னையில் தொடங்குகிறது.

இதில் சென்னை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று போட்டியில் இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான ஆட்டம், டிராவில் முடிவடைந்தது.

சவுதி அரேபியாவின் அபா நகரில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இம்மாதம் 26ஆம் தேதி நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா மீண்டும் ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<